**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6**
**மேல்நிலைஇரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வு,**
**மார்ச் 2023**

சிறப்புத் தமிழ் (புதிய பாடத்திட்டம்)
விடைக்குறிப்புகள்

மதிப்பெண்கள்:90

பகுதி–1

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் 20x 1 = 20

| | | |
|---|---|---|
| 1 | அ | சங்க இலக்கியங்கள் |
| 2 | அ | அந்தாதி |
| 3 | இ | காளிதாஸ் |
| 4 | அ | செம்மீன் |
| 5 | அ | சக்கி |
| 6 | ஆ | அசோகமித்திரன் |
| 7 | அ | 1895 |
| 8 | ஆ | மஞ்சள் |
| 9 | அ | (1) மற்றும் (3) |
| 10 | அ | மல்லிக் |
| 11 | ஈ | கணினி மொழியியல் |
| 12 | அ | ஹாம் வானொலி |
| 13 | இ | 1-(iv), 2-(i), 3-(ii), 4-(iii) |
| 14 | ஆ | மார்கோனி |
| 15 | ஆ | கையறுநிலை |
| 16 | இ | ரத்தம் ஒரே நிறம் |
| 17 | இ | குடிக்கும் பானம் |
| 18 | ஈ | தொடரின்இடையில் |
| 19 | இ | அ.ச.ஞானசம்பந்தம் |
| 20 | இ | உரியியல் |

பகுதி– II

பிரிவு –1 7x 2 = 14

<u>குறிப்பு</u> : பின்வருவனவற்றுள் எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும் வினா எண் 30–க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

| | |
|---|---|
| 21 | • தீரா–விஞ்ஞானி கந்தர்வனின் அதி அற்புதப் படைப்பாகும்<br>• இயற்கை மொழி ஆய்வுக்காக அவரால் உருவாக்கப்பட்ட ஒரு ரோபோ தீரா ஆகும். |
| 22 | • "நான் ஒரு பிசினஸ்மேன், ஆதாயம் இல்லாம எதையும் செய்யமாட்டேன்" என்றார் ஆர்.ஆர்.எம்.<br>• மேலும், இவர்கள் திருட்டு, புரட்டு இல்லாதவர்கள் என்றும், இவர்களை வளைச்சுப்போட்டா, கட்டட வேலைக்கு உதவியாக இருக்கும் என்றும்,<br>• ஆயிரம் கொடுக்க வேண்டிய இடத்தில் நூறு கொடுத்தால் போதும் என்றும் கூறினார். |



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net

| | |
|---|---|
| 23 | <u>செடிவகைகள்:</u> காட்டாமணக்கு, ஆடாதொடை, சப்பாத்திக்கள்ளி<br><u>கொடிவகைகள்:</u> காரை, ஓணான் கொடி |
| 24 | • எடுக்கக்போகும் ஒரு திரைப்படத்தின் கதையை மிகமிகச் சுருக்கமாக ஒரு பத்தி அளவில் சொல்லப்படுகிற கதைச்சுருக்கம் 'ஒன் லைன்' அல்லது 'ஒருவரிக் கதை' என்று கூறப்படும். |
| 25 | ஆஸ்கார் விருது, பெர்லின் உலகத் திரைப்பட விருது, வெனிஸ் திரைப்பட விருது, டோக்யோ திரைப்பட விருது. |
| 26 | "வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்து... ..."<br>என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.<br>• வடவேங்கடம் முதல் தென்குமரி வரை தமிழ்வழங்கும் நிலப்பரப்பு என தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. |
| 27 | • அச்சு வடிவில் வெளிவரும் நூலைப் போல் மின்னணுவியல் முறையில் அமைந்த நூலே மின்னூல் ஆகும்.<br>• மின்னூலைத் தரவிறக்கம் செய்தோ, இணையத்தில் நேரடியாகவோ படிக்க இயலும். |
| 28 | வானொலி,தொலைக்காட்சி, இணையம் முதலானவை மின்னனு ஊடகங்கள் என அழைக்கப்படுகிறது. |
| 29 | தியாக பூமி, அலை ஓசை, கள்வனின் காதலி, மகுடபதி, பொய்மான் கரடு ஆகியன கல்கியின் சமூகப் புதினங்களாகும். |
| 30 | • பழைமையும் இலக்கிய இலக்கணப் பாரம்பரியமும் உள்ள மொழிகளே செவ்வியல் மொழிகள்.<br>• செவ்வியல் இலக்கியங்களைப் பெற்றிருக்கும் பழைமையான மொழிகளைச் செவ்வியல் மொழிகள் என்று கூறலாம். |

www.Padasalai.Net

பகுதி– III

7x 3 = 21

<u>குறிப்பு</u> : பின்வருவனவற்றுள் எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும் வினா எண் 40–க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

| | |
|---|---|
| 31 | ஐம்பெருங் காப்பியங்கள்<br>1) சிலப்பதிகாரம்<br>2) மணிமேகலை<br>3) சீவக சிந்தாமணி<br>4) குண்டலகேசி<br>5) வளையாபதி |
| 32 | கதைப்பின்னல்–வரையறு<br>• ஒரு புதினமானது படிப்பவருக்குக் கதையின் ஒட்டுமொத்தப் பார்வையினை அளிக்க வேண்டும்<br>• அப்புதினமானது படிப்பவருக்கு விரித்தும் தொகுத்தும் சொல்லப்படுவதே கதைப்பின்னலாகும். |
| 33 | சங்கத்தில் சேர்வதால் தொழிலாளர்களுக்குக் கிடைக்கும் நன்மைகளாகச் சுசீலா கூறியவை:<br>• சங்கத்தில் சேர்வதால் தொழிலாளர்களுக்கு பல்வேறு நன்மைகள் கிடைக்கின்றன. |



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

| | |
|---|---|
| | • இ.எஸ்.ஐ, கிராஜீட்டி, பிராவிடண்ட் பண்ட் போன்றவை வழங்குதல் வேண்டும் என்பது தொழிலாளர் நலச் சட்டங்கள் ஆகும்.<br>• அதுமட்டுமல்லாமல் நோயுற்ற காலங்களில் அரைச்சம்பளம், விபத்துக் காலத்தில் முழுச்சம்பளம், பிரசவகால ஊதியம், ஊனம் அல்லது இறப்பிற்கு நிவாரணம் வழங்குதல் போன்றவை ஆகும். |
| 34 | செம்மீன் புதினத்தில் சக்கி கூறும் கற்புடையாள் கதை<br>• கற்புடைய பெண்களால்தான் கடலுக்குச் செல்லும் கணவன்மார்கள் காப்பாற்றப்படுகிறார்கள்.<br>• சுறா,சூறாவளி, மரக்கலம் உடைந்தாலும் உயிருடன் கரைக்குத் திரும்புவது மனைவியின் தவ வலிமையும் கற்புமே ஆகும்.<br>• செம்படவன் கடலுக்குச் சென்றபோது கடலில் சூறை கிளம்பிவிட்டது. செம்படவனின் மனைவி கடற்கரையில் மேற்கு நோக்கி நின்றவாறு தவம் செய்து கொண்டிருந்தாள்.<br>• கடலில்ஏற்பட்ட எல்லா ஆபத்துகளையும் தாண்டி, ஒரு பெரிய மீனோடு கறைக்கு வந்து சேர்ந்தான். இதற்குக் காரணம் அவளுடைய கற்பும் தவமும் என்று சக்கி கற்புடையாளின் கதையைக் கூறி முடித்தாள். |
| 35 | நவீன நாடகத்தின் நோக்கம்<br>• மக்களைக் கற்பனை உலகிற்குக் கொண்டு செல்லாமல் சமூகச் சிக்கல்களை அந்தந்தச் சூழ்நிலையிலேயே மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டும் என்பதை நவீன நாடகத்தின் நோக்கமாகும்.<br>• பொருட்செலவைக் குறைத்து எந்த இடத்திலும் நாடகத்தை நிகழ்த்தலாம் என்ற சூழ்நிலையை உருவாக்கியது.<br>• மரபு நாடகம் போல களம், அங்கம் போன்றவற்றிற்கு இடம் தராமல் கருத்திற்கு மட்டுமே இடம் அளிப்பது நவீன நாடகத்தின் நோக்கமாகும். |
| 36 | ‘உவரி’ என்னும் சொல்லுக்கு இயல்பான அகராதி, வேர்ச்சொல் அகராதியின் விளக்கம்.<br><u>இயல்பான அகராதி:</u><br>• உவரி– உப்பு, கடல்<br>• இவ்விளக்கத்தினை இயல்பான அகராதியில் காணலாம்.<br><u>வேர்ச்சொல் அகராதி:</u><br>• உவர் என்னும் உப்பினைச் கொண்டிருப்பதால் கடல் உவரி எனப்பட்டது.<br>• மேலும் ‘உ’ என்னும் உயர்வுப்பொருள் சுட்டடியாக உ–உக–உகர்ப்பு–உவர்–உவரி என இச்சொல் பிறந்தது.<br>• மேலும் மேலும் விளக்கம் கொடுத்துச் சொல்வது வேர்ச்சொல் அகராதி ஆகும். |
| 37 | நடமாடும் ஒளி–ஒலிப்பதிவுக் கூடம்<br>• நிலையத்திற்கு வெளியே நடக்கும் நிகழ்ச்சிகளைப் பதிவு செய்து, தொலைக்காட்சி நிலையத்திலிருந்து ஒளிபரப்பும் சிற்றுந்துகளையே ‘நடமாடும்’ ஒளிபரப்புக் கூடம் என்று அழைப்பர். |
| 38 | வானொலியில் வழங்கப்படும் உழவருக்கான நிகழ்ச்சிகள்<br>• வானொலியில் உழவர் நிகழ்ச்சி மூலமாக விதைகள் அறிமுகம் செய்தல், பயிர்களைப் பராமரித்தல் மற்றும் பயிர்களைத் தாக்கும் நோய்கள், தடுக்கும் முறைகள் முதலியவற்றை வேளாண் விரிவாக்க அலுவலர்கள்விளக்கம் அளிக்கின்றனர். |

www.Padasalai.Net



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

| | |
|---|---|
| | • மேலும், வேளாண் திட்டங்கள், அரசின் கடன் உதவிகள், நீர்மேலாண்மை, கால்நடை வளர்ப்பு<br>• சிற்றூர் வளர்ச்சிப் பணிகள், குடிசைத்தொழில்கள் எனப் பல்வேறு செய்திகளை வானொலி உழவர்களுக்காக ஒலிபரப்பி வருகிறது. |
| 39 | <u>செல்பேசிகளில் காணப்படும் வன்பொருள் கூறுகள்:</u><br>• செல்பேசியின் செயலகமான மையச் செயலகம்(CPU)<br>• மின்சாரம் வழங்கும் மின்கலம்<br>• ஒலியை வழங்கும் ஒலிப்பான்<br>• பயனர் தொடர்புகள், உள்ளீடு செய்தல் மற்றும் பலவற்றைக் காட்டும் திரை<br>• செறிவு அட்டை |
| 40 | 5ஜி தொழில்நுட்பம் – சிறப்புகள்<br>• 5ஜி தொழில்நுட்பத்தின் வழி தகவல்கள் கடந்து போக ஒரு மில்லி செகண்ட் மட்டுமே போதுமானது.<br>• 5ஜி தொழில்நுட்பம் திறன்பேசிகளின் வழியாக அலைவரிசை சேவைகளையும் தாண்டி, பல்துறைகளில் செயல்பட்டு வருகிறது.<br>• குறிப்பாக இயந்திர மனிதர்கள், தானே இயங்கும் மகிழுந்துகள், உடல் நல மருத்துவம், வேளாண்மை, கல்வி போன்ற பல துறைகளிலும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. |

பகுதி– IV

<u>குறிப்பு</u> : பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்

1)7 x 5 = 35

| | |
|---|---|
| 41 (அ) | 1) பெரியபுராணம் எனப்படும் திருத்தொண்டர் புராணம் சைவக் காப்பியமாகும்.<br>2) சுந்தரர் எழுதிய ‘திருத்தொண்டர்தொகை’ நம்பியாண்டார் நம்பி எழுதிய ‘திருத்தொண்டர் திருவந்தாதி’ ஆகிய நூல்களை முதல் நூலாகக் கொண்டு இந்நூல் இயற்றப்பட்டது.<br>3) இது 63 அடியார் பெருமக்களை மையமாகக் கொண்டு திகழ்கின்றது.<br>4) இந்நூல் பெரும்பிரிவாக இரண்டு காண்டங்களையும் உட்பிரிவாக 13 சருக்கங்களையும் உடையது.<br>5) இது சைவத்திருமுறைகளுள் பன்னிரண்டாம் திருமுறையாக வைக்கப்பட்டுள்ளது.<br>6) இந்நூலின் ஆசிரியர் சேக்கிழார் இவரின் இயற்பெயர் அருண்மொழித்தேவர்.<br>7) ஆண்,பெண் வேறுபாடின்றிப் பல இனங்களையும், தொழில் பிரிவுகளையும் சார்ந்த சிவனடியார்களைப் பற்றிய நூலாக அமைந்துள்ளதால் இந்நூலைத் தேசிய இலக்கியம் என்று சான்றோர்கள் பாராட்டுவர்.<br>8) சுந்தரரைக் காப்பியத் தலைவராகக் கொண்டு இந்நூல் அமைகின்றது. சுந்தரரின் சிறப்பு –சைவ அடியார்களின் சிறப்பு–சிவபொருமானின் அருள்திறம்–அடியார்களின் வரலாறு பற்றிக் கூறுவதால் சேக்கிழார் இந்நூலுக்குத் திருத்தொண்டர்மாக் கதை எனப் பெயரிட்டார். |
| | (அல்லது) |
| 41 (ஆ) | 1. வெண்ணிக்குயத்தியார் பாடிய புறநானூற்றுப் பாடல் வாகைத் திணையில் இடம் பெற்றுள்ளது.<br>2. சங்க காலத்தில் வீரம் முதன்மையாகப் போற்றப் பெற்றது. |

www.Padasalai.Net



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

| | |
|---|---|
| | 3. ஆடவரும், மகளிரும் இயற்கையிலேயே மறப்பண்பு மிக்கவராய் விளங்கியதால் எண்ணற்ற போர்கள் நடைபெற்றன.<br>4. போரில் விழுப்புண்பட்டு உயிர்விடுவதைப் பெருமையாகக் கருதினர். புறப்புண் பெற்றவர்கள் வடக்கிருந்து உயிர்நீத்தலைப் புகழெனக் கருதினர்.<br>5. கரிகால் பெருவளவனே நீ போரில் வென்றாய். அதனால் நீ நல்லவன் பெருஞ்சேரலாதன் வெண்ணிப்புறந்தலைப் போரில் உன் வலிமைமிக்கத் தாக்குதலால் புறப்புண்பட்டான் அதற்காக வருந்தி அப்போர்களத்திலேயே வடக்கிருந்து உயிர் துறந்தான். அவன் உன்னைக் காட்டிலும் நல்லவன் என்று வெண்ணிக்குயத்தியார் வடக்கிருந்து உயிர்நீத்தலைச் சிறந்த வீரமாகப் பாடியுள்ளார். |
| 42 (அ) | • பங்கஜத்தின் தந்தை இறந்துவிட்டதால் தன் தாய்க்கும் தங்கைக்கும் தான் ஆதரவு தரவேண்டும் என்ற கருத்தில் தன் வீட்டில் வைத்துக் கொண்டாள்.<br>• அவளுக்கு கைக்குழந்தை இருந்ததால், தாய் அக்குழந்தையைக் கவனித்துக் கொள்ளவும், வீட்டு வேலைகளில் ஒத்தாசையாகவும் இருந்தாள்.<br>• தங்கை நிம்மிக்கும் பங்கஜத்திற்கும் அடிக்கடி தகராறு ஏற்பட்டது.<br>• காரணம் வீட்டில் யாரிடமும் கேட்காமல் தன் கணவன் சட்டைப்பையிலிருந்து பணம் எடுத்துக் செலவு செய்கிறாள் கணவன் கோபப்படுவதற்கு முன், தானே அவளைத் தண்டிக்க வேண்டும் என்று நினைத்தாள்.<br>• அவளைத் தண்டிக்கும் போது அம்மாவிற்குக் கோபம் ஏற்பட்டு தங்கை நிம்மியை அழைத்துக் கொண்டு தன் வீட்டிற்குச் செல்கிறாள்.<br>• தான் கேட்டதால்தான் அம்மா வீட்டைவிட்டுச் சென்றுவிட்டாரோ ? கேட்டிருக்கக் கூடாதோ ? பின் எப்படி நிம்மியை திருத்துவது ? என்றெல்லாம் யோசித்த அவள் ஒருநாள் மனநோயாளியாகவே மாறிவிட்டாள்.<br>• எந்த ஒரு நிகழ்வையும் நேர்மறை எண்ணத்துடன் எடுத்துக் கொண்டால், யாருக்கும் மனஉளைச்சல் இல்லை என்பதை பங்கஜம் கதாபாத்திரத்தின் வாயிலாக அறிய இயலுகிறது. |
| | (அல்லது) |
| 42(ஆ) | • ஐரோப்பிய, பார்சிய, மராத்திய அரங்கியலை உள்வாங்கி பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தமிழ்நாடகக் கலையில் பெரும் மாற்றம் ஏற்பட்டது.<br>• நாடகங்களின் அமைப்பு, மேடை அலங்காரம், உத்திகள் ஒப்பனைகள், நாடகம் நடக்கும் காலஅளவு போன்றவற்றில் மாற்றம் ஏற்பட்டது.<br>• நாடகத்துறையின் புதிய பரிமாணத்திற்குக் காரணமாக அமைந்தவர்களாக சங்கரதாஸ் சுவாமிகள், பம்மல் சம்பந்தனார் பரிதிமாற்கலைஞர் ஆகியோரைக் குறிப்பிடலாம்.<br>• புராணக் கதைகளேயன்றிச் சமூகச் சீர்திருத்தக் கருத்துகைகளைக் கொண்ட சீர்திருத்த நாடகங்களும் இயற்றப்பட்டன.<br>• விடுதலைக்குப்பின் மக்களின் வாழ்க்கைச் சிக்கல்களைப் பேசும் நாடகங்களும் எழுதப்பட்டன.<br>• இவ்வாறு நவீன நாடகங்கள் தொடர்ந்து வளர்ச்சி அடைந்தன. |
| 43 (அ) | • கனவு கண்டு கொண்டே கனவுக்குள் இருப்பது போல நம்மைச் சூழ்ந்த பெருங்கனவே திரைப்படமாகும். |

www.Padasalai.Net



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

| | |
|---|---|
| | • கதை எழுதி, திரைக்கதை எழுதி, வசனம் எழுதி, இயக்கி, ஒளிப்பதிவு செய்து, இசைச்சேர்த்து, பெரும் முதலீட்டில் உருவாகும் திட்டமிட்ட கூட்டு முயற்சியே திரைப்படமாகும். இத்திரைப்படமானது, ஆயிரம் பேரைக் காப்பாற்றும் தொழிலாகவும், கலைகளின் சங்கமாகவும் திகழ்கிறது.<br>• திரைப்படத்தில் கதை தொடங்கி, எடிட்டிங்வரை ஒவ்வொரு தலைகளும் மிளிர்ந்து கொண்டுதான் இருக்கிறது. கதை,கதைக்கேற்ற வசனம், வசனத்திற்கேற்ற சூழல், சூழலுக்கேற்ற நடிப்பு, நடிப்பிற்கேற்ற இசை, இசைக்கேற்ற குரல், காட்சிக்கேற்ற பதிவு, பதிவுக்கு ஏற்ற நேரம் என அவரவர் கலைகளை வார்த்தெடுத்து வடிவமைத்துக் கொடுக்கும் சங்கமமே திரைப்படமாகும்.<br>• ஒத்த போக்கை மாற்றும் நடனம், நகைச்சுவை, சண்டைக்காட்சி, ஒப்பனை, பின்னணி சாட்சி, பிரமாண்ட வடிவமைப்பு தொழில்நுட்பம் என திரைப்படக் கலையானது விரிந்து கொண்டே செல்கிறது. |
| | (அல்லது) |
| 43<br>(ஆ) | தகுதி வழக்கு மூன்று வகைப்படும்<br><u>1.இடக்கரடக்கல் :</u><br>பலர் நிறைந்த அவையினிலே சொல்லக்கூடாத சொற்களை மறைத்து, வேறு சொற்களால் கூறுவது இடக்கரடக்கல்<br>எகா. கால்கழீஇ வருதும்<br><u>2.மங்கலம்:</u><br>மங்கலம் அல்லாதவற்றைக் கூறும் போது மங்கலமான வேறு சொற்களால் கூறுவதை 'மங்கலம்' என்பர்<br>எகா–விளக்கை அணை எனக் கூறாமல், விளக்கைக் குளிரவை என கூறுதல்<br><u>3.குழூஉக்குறி :</u><br>ஒரு குழுவுக்குள் ஏதேனும் ஒரு காரணம் பற்றி, அக்குழுவினருக்கு மட்டும் புரியும் வகையில், பொருள் தரும் சொற்களைப் பயன்படுத்துவதனைக் குழூஉக்குறி என்பர்<br>எகா–பொற்கொல்லர் பொன்னைப் 'பறி' எனக் கூறுவர் |
| 44(அ) | <u>படைப்பாளிக்கும், படிப்பவருக்கும் இடையே பாலமாக விளக்குவது திறனாய்வு</u><br>• படைப்பவருக்கும் படிப்பவருக்கும் இடையே ஒரு பாலமாக விளங்குவது திறனாய்வு<br>• ஓரிலக்கியம் படைக்கப்பட்டவுடன் படிக்கப்படலாம் அல்லது பல ஆண்டுகளுக்குப் பின்னரும் படிக்கப்படலாம்.<br>• அவ்விலக்கியம் உருவான காலச்சூழல், பின்னணி ஆகியவற்றைத் தெள்ளத் தெளிவாகத் திறனாய்வு வெளிப்படுத்தியிருக்கும்.<br>• எடுத்துக்காட்டாக பாரதியார் பாடல்கள் தோன்றியதன் பின்னனி, விடுதலை உணர்வை வேண்டி நின்ற காலமாக இருந்தது.<br>• இக்காலத்தில் அத்தகைய சூழல் இல்லை<br>• எனவே, படைப்புகளை அக்காலத்தில் சூழலோடு ஆய்வு செய்வதற்கே திறனாய்வு பயன்படுகிறது. |
| | (அல்லது) |
| 44(ஆ) | • கல்மரம் புதினத்தில், சுசீலா கட்டடத் தொழிலாளர்களின் மறுவாழ்வுக்கு மேற்கொண்ட நடவடிக்கைகள்<br>• கட்டடத் தொழிலாளர்களின் நலனுக்காகப் பாடுபட்டவர் சுசீலா<br>• இவர் ஒரு சமூக சேவகி |

www.Padasalai.Net

| | |
|---|---|
| | • கட்டடத் தொழிலாளர்களைச் சங்கத்தில் சேரும்படியாகக் கேட்டுக் கொண்டாள்.<br>• அதுமட்டுமல்லாமல் சங்கத்தில் சேர்வதால் ஏற்படும் பயன்களையும் எடுத்துக் கூறினாள்<br>• சங்கத்தில் சேர்வதால் தொழிலாளர்களுக்குப் பல்வேறு நன்மைகள் கிடைக்கின்றன.<br>• இ.எஸ்.ஐ, கிராஜுட்டி, பிராவிடண்ட் பண்ட் போன்றவை வழங்குதல் வேண்டும் என்பது தொழிலாளர் நலச் சட்டங்கள் ஆகும்.<br>• அதுமட்டுமல்லாம, நோயுற்ற காலங்களில் அரைச்சம்பளம், விபத்துக்காலத்தில் முழுச்சம்பளம், பிரசவகால ஊதியம், ஊனம் அல்லது இறப்பிற்கு நிவாரணம் வழங்குதல் போன்றவை ஆகும்.<br>• படித்தவள், சட்டம் தெரிந்தவள், கொத்தடிமைகளாக இருத்தல் கூடாது என்ற எண்ணம் கொண்டவள், பெண்களுக்கும் வலிமை சேர்த்தவள்.<br>• கூலி தொழிலாளியை ஆர்.ஆர்.எம் (முதலாளி) கைநீட்டி அடித்ததால் தொழிலாளர்களை ஒன்று சேர்த்துப் பணிக்குச் செல்லவிடாமல் தடுத்து நிறுத்தி முதலாளிக்குச் சரியான பாடம் புகட்டியவள்.<br>• இவ்வாறு சுசீலா தொழிலாளர் நலனில் மிகுந்த அக்கறைக் காட்டிய ஒரு சேவகி ஆவாள். |
| 45(அ) | <u>குறிப்பு</u> –திறனாய்வு அணுகுமுறைகள் எவையேனும் இரண்டைப் பற்றி விரிவாக எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்.<br>**1.அறநெறி அணுகுமுறை:** மனித சமூகத்தில் தோன்றுதொட்டு மரபு வழியாக வந்தவை அறங்கள். இவற்றை மையமாகக் கொண்டு, இலக்கியங்களை அணுகுவது.<br>• “அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயனே” என்று இலக்கணம் கூறுகிறது. திருக்குறள் சமயஞ்சாரா அறத்தைக் கூறுகிறது.<br>• சிலப்பதிகாரத்தில் மூன்று உண்மைகள் உணர்த்தப்படுகிறன்றன.<br>**<u>2. சமுதாயவியல் அணுகுமுறை</u>**<br>• சமுதாயத்தில் வாழும் மக்களின் வாழ்க்கை நிகழ்வுகளே, இலக்கியங்களின் கருப்பொருளாக அமைகின்றன.<br>• தமிழ்ச் சமூக வரலாற்றுக்குக் குறிப்பாகப் பழந்தமிழ்ச் சமூகத்தை அறிந்துகொள்ள சமுதாயவியல் அணுகுமுறைகள் உதவுகின்றன.<br>**3. உளவியல் அணுகுமுறை**<br>மனித மனம் சார்ந்த பல்வேறு கருத்தாக்கங்களை முன்வைத்து, இலக்கியத்தை அணுகித் திறனாய்வது.<br>சிக்மண்ட் ஃபிராய்டு என்பவர் உருவாக்கிய உளபகுப்பாய்வுக் கோட்பாட்டின் அடிப்படையில் இவ்வணுகுமுறை மேற்கொள்ளப்படுகிறது.<br>சிலப்பதிகாரத்தில் கண்ணகி காணும் தீக்கனவு அவளுடைய குழப்பமான மனநிலையின் வெளிப்பாடேயாகும்.<br>**4. மார்க்சிய அணுகுமுறை**<br>பொருளையும்அதன் இயக்கத்தையும் முதன்மையாகக் கொண்டு உலகத்தையும் அதன் வாழ்வியல் உத்திகளையும் விளக்குவது மார்க்சியம்.<br>இக்கோட்பாட்டைக் காரல் மார்க்ஸ் என்பவர் உருவாக்கினார். பிற தத்துவங்கள் உணர்வுகளை அடிப்படையாகக் கொண்டிருக்க, மார்க்சியம் பொருள் முதல் என்பதை மையமாகக் கொண்டுள்ளது.<br>**5. அமைப்பியல் அணுகுமுறை** |

www.Padasalai.Net



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

| | |
|---|---|
| | • ஓர் அமைப்பு என்பது, பல பகுதிகளை உடையது. அவை ஒவ்வொன்றும் ஆற்றலும் திறனும் உடையன.<br>• அமைப்பின் உறுப்புகள் சிதையுமானால் கட்டமைப்பும் சிதைந்துவிடும் இக்கருத்தின் அடிப்படையில் இலக்கியத்தை அணுகுவது அமைப்பியல் அணுகுமுறை |
| | (அல்லது) |
| 45(ஆ) | **<u>1.தனிநபர்அவமதிப்புச் சட்டம்</u>**<br>ஒருவரை அவமதிக்கும் நோக்கத்தோடு பேசுவது, எழுதுவது, சைகை மற்றும் குறியீடுகளால் வெளிப்படுத்துவது அவமதிப்புக் குற்றமாகும்.<br>**<u>2. நாடாளுமன்ற நடவடிக்கைச் சட்டம்</u>**<br>நாடாளுமன்றத்தின் நடவடிக்கைகளை வெளியிடுவதற்கான சட்டம்<br>**<u>3. நீதிமன்ற அவமதிப்புச் சட்டம்</u>**<br>• தீர்ப்பு வழங்குவதற்கு முன்பாகவே குற்றவாளி என்று ஊடகத்தில் குறிப்பிடக்கூடாது.<br>• நீதிமன்ற சட்டத்தையோ, தீர்ப்புகளையோ அவதூறு செய்வதுபோல் வெளியிடுதல் கூடாது. இப்படி நேர்ந்தால், குற்றவியல் வழக்காகப் பதிவு செய்யப்படும்.<br>**<u>4. அலுவலக ரகசியங்கள் சட்டம்</u>**<br>நாட்டின் பாதுகாப்பு, வெளிநாட்டு தொடர்பு, குற்றப் புலனாய்வு, அமைச்சரவை முடிவு போன்றவற்றை இரகசியமாக வெளியிடுவது குற்றமாகும்.<br>**<u>5. காப்புரிமைச் சட்டம்</u>**<br>தன் சொந்த படைப்பிற்கு மட்டும் ஒருவர் காப்புரிமைப் பெற முடியும். அவருடைய படைப்பை அனுமதியின்றி வேறு எவரும் பயன்படுத்த முடியாது.<br>**<u>6. பத்திரிக்கை, புத்தகங்கள் பதிவுச் சட்டம்</u>**<br>ஒருவர் தன் கருத்துகள் அடங்கிய நூலை, இதழை அரசிடம் அனுமதி பெறுவது.<br>**<u>7. ஆபாச வெளியீட்டுத் தடை</u>**<br>நாகரீகமற்ற அரைகுறை ஆடை, ஓவியங்களா, பாலின இழிவுப் படங்கள், நிகழ்வுகள் (எவையேனும் ஐந்து எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்குக) |
| 46(அ) | மின்னூலின் சிறப்பம்சங்கள்<br>• குறைந்த செலவில் உயர்ந்த தரமான நூல்களை உருவாக்க முடியும்<br>• தனியாக இட வசதியோ நூலக அறையோ தேவையில்லை. கணினியோ, கையடக்கக் கருவியோ போதுமானது.<br>• தேவையான புத்தகத்தையோ, கருத்தையோ, பக்கங்களையோ சில நொடிகளில் பெற முடியும்.<br>• மின்–நூல்கள் வாயிலாக உலக அளவில் நூல்களை பரிமாறிக் கொள்ள வாய்ப்பிருக்கிறது.<br>• கையில் எப்போதும் புத்தகம் இருப்பதுபோல எங்கு வேண்டுமானாலும் வாசிக்கலாம்.<br>• இதனால் வாசிப்பு பழக்கம் அதிகமாகக் கூடும். |
| | (அல்லது) |
| 46 (ஆ) | செல்பேசியில் மென்பொருளின் பங்கு |

www.Padasalai.Net



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

| | |
|---|---|
| | • இயக்க முறைமை OSஎனச் சுருக்கமாக அழைக்கப்படுகிறது.<br>• இந்த மென்பொருளானது வன்பொருள், பயன்பாட்டு மென்பொருள் மற்றும் பயனர்களுக்கு இடையே பாலமாக இருக்கும் ஓர் இடைமுகமாகும்.<br>• திறன்பேசிகளுக்கு ஆண்ட்ராய்டு, பிளாக்பெர்ரி இயக்க முறைமை, வெப் ஓஎஸ், ஐஓஎஸ், சிம்பியன், விண்டோஸ் இயக்க முறைமை மற்றும் படா உட்பட பல வகையான இயக்க முறைமைகள் உள்ளன.<br>• ஆப்பிள் ஐஓஎஸ், ஆண்ட்ராய்டு ஆகியவை மிகவும் பரவலாக அறியப்பட்ட இயக்க முறைமைகள் ஆகும்.<br>• இயக்கு முறைமைகள் பயனர்களுக்குத் தன்னுதவிக் கருவிகள், விளையாட்டுகள், ஜிபிஎஸ் உள்ளிட்ட பிற பயன்பாட்டுக் கருவிகளைப் பதிவிறக்க அனுமதிக்கின்றன.<br>• பயனர்கள் தாங்களே செயலிகளை உருவாக்கி அவற்றை இயக்க முறைகள் மூலம் வெளியிடவும் முடியும். |
| 47(அ) | 1) 19–ஆம் நூற்றாண்டில் தோன்றிய வலிமையான காட்சி ஊடகம் திரைப்படம்<br>2) 1900இல் தென்னிந்தியாவின் முதல் திரையரங்கு சென்னை அண்ணாசாலையில் ஆங்கிலேயரால் கட்டப்பட்டது.<br>3) இதன் பெயர் எலக்ட்ரிக் தியேட்டர் ஆகும்.<br>4)1905–ல் திருச்சியில் சுவாமிக்கண்ணு வின்சென்ட், என்பவர் "எடிசன் சினிமாட்டோ கிராப்" என்ற திரைப்படம் காட்டும் நிறுவனத்தைத் தொடங்கினார்.<br>5)தமிழில் முதல் பேசும்படம் 'குறத்திப்பாட்டும் டான்ஸும்' என்ற நான்கு படச்சுருள் கொண்ட குறும்படம்.<br>6) அதன்பிறகு "காளிதாஸ்" தமிழில் வெளிவந்த முழு நீள பேசும் திரைப்படம் ஆகும்.<br>7) காலப்போக்கில் அறிவியல் வளர்ச்சியாலும், இயக்குநர்களாலும் தமிழ்த் திரைப்படங்கள் வளர்ச்சி அடைந்தன, |
| | (அல்லது) |
| 47(ஆ) | • தொடக்கம் அன்னைத் தமிழ்ச் சங்கத்தின் 7வது புத்தகக் கண்காட்சிக்கு வருகைப் புரிந்துள்ள அனைவரையும் வருக வருக என வரவேற்கிறோம்.<br>• முதலாவதாக – தமிழ்த்தாய் வாழ்த்து<br>• இப்புத்தகக் கண்காட்சி ஒளிமயமாகத் திகழ சிறப்பு விருந்தினராக வருகைப் புரிந்திருக்கும் எழுத்தாளர் திரு.சோ.தர்மன் அவர்களைக் குத்துவிளக்கினை ஏற்றித் தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.<br>• எங்கள் பள்ளியில் ஆண்டுதோறும் இக்கண்காட்சி நடைபெறும் என்றும் நமக்கு என்றும் உறுதுணையாக இருக்கும் நம் மாவட்டத்தின் முதன்மைக்கல்வி அலுவலர் ஐயா அவர்களை வரவேற்புரை நல்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.<br>• சமீபத்தில் சூல் நாவலிற்கு சாகித்ய அகாதமி விருது பெற்ற இவ்விழாவின் நாயகன் அவர்களை சிறப்புரை ஆற்ற வருமாறு அன்புடன் அழைக்கிறோம்.<br>• இறுதியாக அனைவருக்கும நன்றியுரை நவிலவருமாறு எம் பள்ளியின் தலைமையாசிரியரை அன்புடன் அழைக்கிறோம்.<br>• நாட்டுப்பண்<br>(இவ்வினாவிற்கு ஏற்புடைய கருத்துகள் எழுதியிருப்பின் முழுமதிப்பெண் வழங்கலாம்) |

www.Padasalai.Net



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

**1.**பா.ஆனந்தவல்லி
அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, அலங்காநல்லூர்
**9994242192**
**2.**ம.ஜெயகணேஷ்
அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, அலங்காநல்லூர்
**8870907288**
**3.**வெ.வாசுகி
அரசு மேல்நிலைப்பள்ளி, சமயநல்லூர்,
**9095118273**

www.Padasalai.Net



**Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com**